KALKI 24 FEB 08

# கிட்னி திருட்டு: மெடிக்கல் டூரிஸம் வளர்க்கும் மோசடி!



"முன்னாடி எல்லாம் நெஃப்ராலஜிஸ்ட்னு சொன்னா ரொம்பவே மதிப்பும் மரியாதையும் இருந்துச்சு. ஆனா, இன்னைக்குச் சூழல்ல அப்படிச் சொல்றதுக்கு கொஞ்சம் தயக்கமா இருக்கு!" என்று சிரிக்கிறார் விஜயா சுகாதார மைய சிறுநீரக மருத்துவப் பிரிவின் இயக்குனர் டாக்டர் இராஜன் ரவிச்சந்திரன். அமெரிக்காவின் வாஷிங்டன் ஃபெலோஷிப் விருதும், ஸ்காட்லாண்டின் 'ஃபெலோஷிப்' விருதும் இவருக்கு இவ்வாண்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மகிழ்ச்சியைக்கூட மறந்து கவலையுடன் பேசுகிறார்.

"பத்திரிகைகளைப் புரட்டினா, கிட்னி திருட்டுப் பத்தி பரவலா செய்தி அடிபடுது. வேதனையா இருக்கு. பத்திரிகைச் செய்தியில வர்ற மாதிரி, யாரோ ஒருத்தர்கிட்டேயிருந்து கிட்னி எடுக்கறதுங்கறதெல்லாம் முடியாது. அதுக்கான செக்கப் எல்லாம் நிறைய பண்ண வேண்டியிருக்கும். ஆனா, கிட்னி திருட்டு கேஸ்ல சில டாக்டர்களும், பெரிய பெரிய ஆஸ்பிடல்களும் ஈடுபடுவது ரொம்பவே வருத்தமான தண்டிக்கத்தக்க விஷயம்தான்" என்கிறார்.

'சட்டரீதியா இப்பிரச்னைக்கு என்னதான் தீர்வு?' என்றால், "ஒருவருக்குச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யணும்னா, அவருக்கு கிட்னி தானம் தர்றவங்க இரத்த சம்பந்த உறவா இருக்கணும்னு சட்டம் சொல்லுது. அதேசமயம் எமோஷனல் ரிலேஷன்னு சொல்லக்கூடிய நண்பர்கள், நல விரும்பிகள் கிட்டயிருந்து உள்ளவங்களும் தானம் செய்யலாம்னு சட்டத்துல இடம் இருக்கு. இந்த கேப்லதான் கிட்னி திருட்டு கேஸுங்க நிறைய நடக்குது" என்கிறார்.

"சிறுநீரகம் செயலிழந்து உயிருக்குப் போராடற நோயாளி ஒரு பக்கம், வறுமைக்குப் பயந்து வகை தெரியாம பணத்துக்கு ஆசைப்பட்டு, கிட்னி தானம் தர வர்ற ஏழை ஒரு பக்கம். நோயாளியையும் காப்பாத்தணும்! ஏழையும் வாழணும்ங்கிற நோக்கத்துலதான் சில டாக்டர்கள் சட்டத்துக்குப் புறம்பா அந்தக் காரியத்துல இறங்கிடறாங்க. ஆனா, இந்த விஷயத்துல காசு பார்க்கறது என்னமோ மீடியேட்டர்கள்னு சொல்ற இடைத்தரகர்கள்தான்!"

'வசதியான வாழ்க்கை நடத்தற டாக்டர்களுக்கு அப்படி என்ன அவசியம் இருக்கு இந்த மோசடியைச் செய்யறதுக்கு?' என்றால், "பெரிய அளவிலே ஆஸ்பிடல் கட்டிடறாங்க. அதை மெயின்டெய்ன் பண்ணணும்னா காசு வேணுமே! சுகாதாரமான ஆஸ்பிடலா இருக்கணும்ங்கறதைவிடவும், ஆடம்பரமான ஆஸ்பிடலா இருக்கணும்னு நினைக்கிறாங்களோ என்னவோ சில டாக்டர்களும், பெரிய பெரிய ஆஸ்பிடல்களும் இது மாதிரியான குறுக்கு வழியில இறங்கி பணம் பண்ணிடறதும் நடக்குது" என்று வருந்துகிறார்.

"இப்போல்லாம் மக்கள் மனோபாவமும் மாறிப் போயிருக்கு. சின்னத் தலைவலின்னாகூட ஸ்கேன் டெஸ்ட் எடுத்துப் பார்த்துடணும்னு நினைக்கிறாங்க. டெஸ்ட் எடுக்கற விஷயத்துல அமெரிக்கர்கள்கூட யோசிக்க ஆரம்பிச்சிட்டாங்க. ஆனா, நாமதான் சின்ன விஷயத்துக்கும் நாலு டெஸ்ட் எடுத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கோம்! பல வியாதிகளுக்கு பேஷன்டுகிட்டே உட்கார்ந்து பேசினாலே என்ன பிரச்னைன்னு கண்டுபிடிச்சிடலாம்; தீர்வும் சொல்லிடலாம். ஆனா, கிட்னி ஃபெயிலியர் கேஸ் மட்டும் சிக்கலானது.

ஒவ்வொரு கிட்னியிலயும் சுமார் பத்து லட்சம் நெஃப்ரான்கள் இருக்கின்றன. இந்த நெஃப்ரான்கள்தான் நம்ம உடம்போட கழிவுகள் வெளியேற்றத்தையும், சுத்திகரிப்பு வேலையையும் செஞ்சு உடம்பைக் கட்டுக்குள் வெச்சிருக்கு. ஒரு கிட்னி ஃபெயிலியரானாலும் மறு கிட்னி வேலையைக் கவனிச்சுக்கும். அதுவும் செயலிழந்து போச்சுன்னா, மனுஷன் கிட்டத்தட்ட நடைப்பிணம்தான். இந்தச் சமயத்துலதான் அவனுக்கு டாக்டர்கள் அவசியமாகறாங்க.



● இராஜன் ரவிச்சந்திரன்

பொதுவா, கிட்னி ஃபெயிலியர் ஆகறது டயாபடீஸ், இரத்தக்

அதிகமா ஆன்டிபயாடிக்ஸ், பெயின் கில்லர் மாத்திரைகள் சாப்பிடறவங்களுக்கும்தான். பிறப்பிலேயே சில குறைபாடு உள்ளவங்களுக்கும் கிட்னி ஃபெயிலியர் ஆகலாமுண்டு.

'மெடிக்கல் டூரிஸம்'னு சொல்லக்கூடிய, வெளிநாட்டிலிருந்து வரும் பேஷன்டுகளால பெரிய வருமானத்தை எதிர்பார்க்கிற மருத்துவமனைகளாலதான், பெரும்பாலும் இந்தச் சிறுநீரக மோசடிகள் அரங்கேற்றப்படுகின்றன. வெளிநாட்டினர் வருகையால மருத்துவமனைகளும் டாக்டர்களும் சம்பாதிச்சு, சட்டத்துக்குப் புறம்பா காசும் சேர்த்துடறாங்க.

இதனால, உள்ளூர் பேஷன்டுகளுக்கும் மருத்துவச் செலவுகள் கூடிப் போகுது. ஆக, மெடிக்கல் டூரிஸம் என்பது அவ்வளவா வரவேற்கத்தக்க விஷயமல்ல" என்றவர்,



"முறையான உடற்பயிற்சி, சரியான ஆகாரம், சுத்தமான தண்ணீர் இருந்தா போதும்! கிட்னி ஃபெயிலியர் ஆகாது. அப்புறம் திருட்டுக்கு என்ன அவசியம் வரப்போகுது!" என்கிறார்.

"திருடனாப் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாதுன்னு சொல்வாங்க. புனிதமான டாக்டர் தொழில்ல இருக்கறவங்க, தங்களோட கடமையை உணர்ந்துட்டா போதும். இதுபோலக் குற்றம் நடக்காது" என்று சொல்கிறார் டாக்டர் இராஜன் ரவிச்சந்திரன்.

– எம்.ஆர்.இராஜேந்திரன்